# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

CSI Tamil Parish - Abu Dhabi

2000 – 2025

25 Years

## அக்டோபர் - 2024 (மடல் - 24) செய்தி - 9

"பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்." சங்கீதம் 67:6

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 9 |
| வேத வினாக்கள் | 20 |
| கோதுமை மணி | 23 |
| துணுக்குகள் | 25 |
| ஆலய பக்கம் | 27 |

**கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. சங்கீதம் 16:8**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் யாவரையும் அன்போடு வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் பாதுகாத்து பராமரித்து வந்திருக்கிறார், ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். புதிய மாதத்தைத் நமக்குத் தந்திருக்கிறார், குறிப்பாக இந்த மாதத்தில் நமது Church Day-ஐ மகிழ்சியுடன் கொண்டாட இருக்கிறோம். நாம் தனித்திருச்சபையாக, சுதந்திரமாகச் செயல்பட்டு 25வது ஆண்டுண்டுக்குள் அடியெடுத்து வைத்திருக்கிறோம். கடந்த 24 ஆண்டுகளாக ஆண்டவர் நம்முடைய திருச்சபையை வளர்ச்சியின் பாதையில் கொண்டு வந்திருக்கிறார். ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும், நம்முடைய குடும்பத்திற்கும் ஆசீர்வாதத்தின் மாதமாக இருக்க ஆண்டவர் அருள் செய்வாராக.

சவுல் அரசனுக்குப் பயந்து தாவீது ஓடுகின்றர். இஸ்வேல் தேசத்துக்குள்ளே வாழ முடியாதச் சூழல், அந்நிய தேசத்துக்குள் அடைக்கலம் தேடவேண்டிய நிலை அவருக்கு ஏற்படுகிறது. சவுல் தன்னைத் துரத்துவது குறித்தோ அல்லது அந்நினிய தேசத்துக்குச் செல்வதிலோ அவருக்குப் பிரச்சனை இல்லை. ஆனால் அந்நிய தேசத்துக்குள் துரத்துவது வழியாக தன்னுடைய ஆண்டவரை செவிப்பதற்கான வாய்ப்பு, இல்லாமல் போகிறதே என்பதுதான் தாவீதுக்கு மிகுந்தக் கவலையைக் கொடுக்கிறது. ஆண்டவரை வழிபட முடியாத நிலையை மிகப் பெரியக் குறையாகக் கருதுகின்றார். ஆண்டவரை செவிக்க முடியா சூழல் தருவது தனக்கு மிகுந்த வருத்தமாக இருக்கிறது என்கிறார். (1சாமுவேல் 26:19) இந்தப் பின்னணியில் இந்த சங்கீதத்தைக் கற்றுக்கொள்வோம்.

### *1. கர்த்தரே நமது நம்பிக்கை:*

சவுலின் தாக்குதலுக்குப் பயந்து தாவீது ஓடினாலும், ஆண்டவர் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்கிறார். நிச்சயமாக அவர் என்னை பாதுகாப்பார் என்கின்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். ***உம்மை நம்பி இருக்கிறேன்*** என்பதற்கு ***உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்*** என்று பொருள். எதிரியின் கைக்குத் தப்பி ஓடுகிறவன் அருகிலிருக்கிற கூடாரத்துக்குள் நுழைந்து பாதுகாப்பைத் தேடுவதுபோல, ஆண்டவரின் வீடாகிய அவருடைய கூடாரத்துக்குள் புகுந்து அடைக்கலம் தேடுகிறார். ஆண்டவர் தன்னை பாதுகாப்பார் என்கின்ற உறுதியான நம்பிக்கை தாவீதுக்கு இருந்தது. ஆபத்துக்களும், பிரச்சனைகளும், துன்பங்களும் நம்மை சூழ்ந்திருக்கின்ற இந்த உலகத்தில் நமக்கு நம்பிக்கையும் பாதுகாப்பையும் கொடுக்கின்ற ஒரே இடம் ஆண்டவரின் ஆலயம். ஆண்டவரே நமக்கு புகலிடமாக இருக்கிறார். ஆண்டவரின் வீடாகிய ஆலயமே நமக்கு அடைக்கலம்.

2. ***ஆண்டவரே நமது உரிமை சொத்து:***
கர்த்தரே என் நம்பிக்கையும், பாதுகாப்பும் என்று சொன்ன பக்தன், இங்கு கர்த்தர் என் பங்கு என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் மக்களின் கோத்திரங்களுக்குக் கானான் இஸ்ரவேல் மக்களின் கோத்திரங்களுக்குக் கானான் தேசம் பங்கிட்டு கொடுக்கப்பட்டது. ஆனால் லேவி கோத்திரத்துக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டில் பங்கு கொடுக்கப்படவில்லை. (யோசுவா 13:14) ***லேவியர்களுக்கு ஆண்டவர் தம்மையே உரிமை சொத்தாகக் கொடுக்கின்றார்.*** (உபாகமம் 10:9) கர்த்தர் லேவியருக்குத் தம்மையே கொடையாகக் கொடுத்தது எனக்கு இனிமையான சொத்து என்கிறார். (இந்த சங்கீதத்தை எழுதியவர் ஒருவேளை ஒரு லேவியனாக இருக்கலாம்) ***ஆண்டவர், இயேசு கிறிஸ்துவை நமக்கு உரிமை சொத்தாகக் கொடுத்திருக்கிறார்.*** அவர் நமது பங்காக இருப்பதால் நாம் அசைக்கப்படுவதில்லை. ஆண்டவரின் ஆலயத்தின் வழியாக வலிமை மிக்க ஆண்டவரின் ஆற்றலை பெற்றுக்கொள்கிறோம்.

***3. கர்த்தரே நமது மன மகிழ்ச்சி:***

ஆண்டவரே தனது உரிமை சொத்தாகக் கிடைத்திருப்பது சங்கீதக்காரனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்த மகிழ்ச்சியானது அவரது உடல், உள்ளம், ஆன்மா அனைத்திலும் வெளிப்படுகிறது. ஏனெனில் அது நிலையான முழுமையான மகிழ்ச்சி. அதோடு, இன்னொரு மகிழ்ச்சியும் அவனுக்குள் இருக்கிறது. தன் ஆத்துமாவை பாதாளத்திலிருந்தும் பாதுகாக்கிறார் என்கிறார். (சங்கீதம் 16:11) ஆண்டவரையும் அவருடைய ஆலயத்தையும் நேசிக்கும் பொழுது, எதிர்கால நிலைவாழ்வு உண்டு என்கின்ற நம்பிக்கை நமக்குக் கிடைக்கிறது. ஆண்டவர் நமக்கு நித்திய மகிழ்வை கொடுக்கின்றார். ஆண்டவரையும் ஆலயத்தையும் நேசிப்போம் ஆண்டவர் கொடுக்கின்ற நித்தியப் பேரின்பத்தைப் பெற்றுக்கொள்வோம்

**கர்த்தர் நம்மையும் நமது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.!**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
Rev. Dr. A. Samuel

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும், நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாகப் பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும், நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

ஆண்டவர் தங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக ஆண்டவரை துதித்து நன்றி செலுத்துகின்ற சங்கீதம். இந்த சங்கீதத்தின் சிறப்பு அம்சம், ***கடவுளின் ஆசீர்வாதம் இஸ்ரவேல் மக்கள் வழியாக முழு உலகத்துக்கும் கொண்டு செல்லப்படுவேண்டும் என்பதே மையக்கருத்தாகக் கருதப்படுகிறது.*** பொதுவாக இந்த பாடலை கூடாரப் பண்டிகை நாட்களிலும், இஸ்ரவேல் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கும் காலங்களிலும் பாடுவார்கள். இந்த சங்கீதம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்படுகிறது:

***1. கடவுளின் ஆசீர்வாதம் இஸ்ரவேல் வழியாக முழு உலகக்கும்:*** (சங்கீதம் 67:1,2)

சங்கீதக்காரன் இந்த வசனங்களில் மூன்று முக்கிய வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்.

- ***ஆண்டவரின் இரக்கம்:*** கடவுளின் இரக்கம் முழுமையான ஆசீர்வாதமாகக் கருதப்படுகிறது. கடவுளின் இரக்கம் தான் நாம் பெறவேண்டிய தண்டனையிலிருந்து நம்மை காப்பாற்றுகிறது.

- ***கடவுளின் ஆசீர்வாதம்:*** தேவரீர் எங்களுக்கு இறங்கி எங்களை ஆசீர்வதியும். ஆசீர்வாதத்திற்காக வேண்டுகிறார். இங்கே ஆசீர்வாதம் என்பது எதிரிகள் மீது கிடைக்கப்படுகின்ற வெற்றியைக் குறிப்பிடுகிறது (2நாளாகமம் 20:26).

- ***கடவுளின் பிரசன்னம்: உம்முடைய முகத்தை எங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணும்.*** இஸ்ரவேல் மக்களின் 40 ஆண்டுகளாக வனாந்தரப் பயணத்திலே ஆண்டவின் பிரசன்னம் தான் அவர்களை வழிநடத்தியது. அதே பிரசன்னமும் துணையும் ஆதரவும் தங்களுக்கு வேண்டும் என்கிறார்.

***பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்,*** (சங்கீதம் 67:1) இஸ்ரவேல் மக்களுக்கு ஆண்டவரின் இரக்கமும், ஆசீர்வாதமும், பிரசன்னமும் கிடைப்பதின் வழியாக முழு உலகமும், எல்லா ஜனங்களும் கர்த்தருடைய வழியையும், அவர் அருளும் மீட்பையும் அறிந்து கொள்வார்கள் என்கிறார். உலக மக்கள் அனைவருக்கும் மீட்பு என்கின்ற கடவுளின் திட்டமும் நிறைவுபெறும் என்கிறார்.

***2. முழு உலகமும் கடவுளை துதிக்க வேண்டும்:*** (சங்கீதம் 67:3-5)

சங்கீதம் 67:3,4,5 இந்த மூன்று வசனங்களை ***சங்கீதத்தின் இதயம்*** என்று சொல்லுவார்கள். முழு உலகமும், இஸ்ரவேலின் கடவுளை துதித்து, தொழுது கொள்ள வேண்டும். இங்கு சங்கீதக்காரன் ***கர்த்தர் (யாவே)*** என்பதற்குப் பதிலாக் ***எல்லோஹிம் (தேவன்)*** என்கிற எபிரெய வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ***உலகம் அனைத்தையும் உண்டாகிய கடவுள்*** என்கின்ற பொது கருத்தை தெரியப்படுத்துகிறார். எனவே முழு உலகமும் கர்த்தரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்பதே சங்கீதக்காரனின் எதிர்பார்ப்பு. இதுதான் ஏசாயா தீர்கனின் விருப்பமும். (ஏசாயா 2:2,3)

***3. நல்ல அறுவடைக்காக ஆண்டவருக்கு நன்றி:*** (சங்கீதம் 67:6,7)

***பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.*** பூமி தன் பலனை தந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி சொலுத்துவதேடு, அனைவரும் சேர்ந்து ஆண்டவரைத் துதிக்க வேண்டும் என்கிறார். செழிப்பான விளைச்சலை, கடவுள் தமது மிகுந்த இரக்கத்துடன் கொடுத்திருக்கிறார். அதோடு, விளைவின் பலனை கொடுப்பவரும் ஆண்டவரே என்கிற செய்தியும் சொல்லப்படுகிறது. ***நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழைபெய்யப்பண்ணுவேன், பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்.*** (லேவியராகமம் 26:4)

நமது ஆண்டவர் எல்லா மக்களுக்கும் ஆண்டவர். எல்லா மக்களும் இரட்சிப்படைய வேண்டும் என்பதே ஆண்டவரின் விருப்பம். நம் வழியாக கடவுளின் மீட்பு, புற இன மக்களுக்கும் சொல்ல வேண்டும். நம் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பொழுது, நம்மை பார்த்து புற இன மக்களும் ஆண்டவர் பக்கம் திரும்புவார்கள். நாம் புற இன மக்களுக்கு சாட்சியாக இருக்க அழைக்கப் பட்டிருக்கிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

மீட்பரின் பணியில்
**திருமதி.ஜெபா சாமுவேல்**

# பாரத்தை இலகுவாக்கும் முதியோரின் ஆலோசனை

மோசேயை கர்த்தர் இஸ்ரவேலை வழிநடத்த அழைத்து, அவர் பார்வோனிடம் சென்றதும், பத்து வாதைகளுக்குப் பின் இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து வெளியேறியதும் நாம் அறிந்ததே. முற்கோபியாய் இருந்த மோசே முற்றிலும் மாறிவிட்டார்.



**முறுமுறுக்கும் மக்களை வழிநடத்தும் மோசே**

முன்னே செங்கடலும் பின்னே பார்வோன் சேனையும் சூழ, மக்கள் முறுமுறுக்க செங்கடலை இஸ்ரவேல் மக்கள் மோசேயின் தலைமையில் கர்த்தரின் வல்லமையால் ஆச்சரியமாய் கடந்தனர்.

பின்னர் உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் மக்கள் முறுமுறுத்த போது, கர்த்தரின் கரத்தில் இருந்து மன்னாவையும் இறைச்சியையும் தண்ணீரையும் பெற்றுக் கொடுத்தார்(யாத்.16&17). அதன்பின் அமலேக்கியரோடு உண்டான போரில், சூரியன் அஸ்தமிக்கும் வரை தன் கையை ஏறெடுத்து, யுத்தத்தில் இஸ்ரவேலர் ஜெயிக்க உதவினார் (யாத்.17). இத்தகைய அதிசயமான காரியங்கள் அனைத்திலும் மக்களுக்கும் கர்த்தருக்கும் நடுவே மோசே மத்தியஸ்தராக இருந்தாலும் தனக்கென ஒரு மகிமையையும் எடுத்துக்கொள்ளவில்லை.

**எத்திரோவின் வருகை**

தேவன் மோசேக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த யாவையும், கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும், மீதியானில் ஆசாரியனாயிருந்த மோசேயின் மாமனாகிய எத்திரோ கேள்விப்பட்டபோது, மோசே தன்னிடம் அனுப்பியிருந்த மோசேயின் மனைவியையும், அவருடைய இரண்டு குமாரரான கெர்சோம், எலியேசரையும் கூட்டிக்கொண்டு மோசே பாளயமிறங்கியிருந்த தேவ பர்வதத்தினிடத்தில் வனாந்தரத்துக்கு வந்தார்.

மோசே தன் மாமனை உபசரித்து கர்த்தர் இஸ்ரவேலினிமித்தம் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்த எல்லாவற்றையும், வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும், கர்த்தர் தங்களை விடுவித்து இரட்சித்ததையும் அவருக்கு விவரித்துச் சொன்னார் (யாத்.18:8). கர்த்தர் செய்த அனைத்தையும் கேட்ட எத்திரோ, கர்த்தரை ஸ்தோத்தரித்து, அவருக்கு சர்வாங்க தகனபலியிட்டு, ஆரோன், மோசே, மற்றும் இஸ்ரவேல் மூப்பரோடு சேர்ந்து தேவசமுகத்தில் போஜனம்பண்ணினார்கள்.

**எத்திரோவின் அறிவுரை**

ஜனங்களை நியாயம் விசாரிக்க மோசே உட்கார்ந்தார். காலமே துவக்கிச் சாயங்காலம் மட்டும் ஜனங்கள் மோசேக்கு முன்பாக நின்றார்கள். ஜனங்கள் இப்படி நெடுநேரம் நிற்க வேண்டிய காரியம் என்னவென்று மோசேயிடம் வினவினார் எத்திரோ. அதற்கு மோசே, “தேவனிடத்தில் விசாரிக்கும்படி ஜனங்கள் என்னிடத்தில் வருகிறார்கள். அவர்களுக்கு யாதொரு காரியம் உண்டானால், என்னிடத்தில் வருகிறார்கள்; நான் அவர்களுக்குள்ள வழக்கைத் தீர்த்து, தேவகட்டளைகளையும் அவருடைய பிரமாணங்களையும் தெரிவிக்கிறேன்” என்றார்.

அப்பொழுது எத்திரோ, “நீர் செய்கிற காரியம் நல்லதல்ல, உமக்கு இது பாரமான காரியம்” என்று கூறி, கீழ்வரும் ஆலோசனையை மோசேக்கு வழங்கினார்: “நீர் தேவசந்நிதியிலே ஜனங்களுக்காக இரும்; விசேஷித்தவைகளைத் தேவனிடத்தில் கொண்டுபோய்; கட்டளைகளையும் பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி;



அவர்கள் நடக்கவேண்டிய வழியையும், அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும். தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை 1000, 100, 50, 10 பேருக்கு அதிபதிகளாக ஏற்படுத்தும். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம்விசாரித்து, பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்; இப்படி அவர்கள் உம்மோடேகூட இந்தப் பாரத்தைச் சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும். ஜனங்கள் எல்லாரும் தாங்கள் போகும் இடத்துக்குச் சுகமாய்ப் போய்ச் சேரலாம்”.

**மோசேயின் முழுமையான கீழ்ப்படிதல்**

தன்னை விட வயதில் முதிர்ந்த தன் மாமன் எத்திரோவின் ஆலோசனைக்கு மோசே உடனடியாக முழுமையாகக் கீழ்ப்படிந்தார். மோசே இஸ்ரவேலர் எல்லாரிலும் திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு அவர்களை 1000, 100, 50, 10 பேருக்கு அதிபதிகளாக ஏற்படுத்தினார். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம் விசாரித்தார்கள்; வருத்தமான காரியங்களைமாத்திரம் மோசேயினிடத்தில் கொண்டுவந்தார்கள்; சிறிய காரியங்களையெல்லாம் தாங்களே தீர்த்தார்கள். இப்படியாக தன்னிடம் வந்த மாமன் தந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, தன் பாரத்தை திறமையுள்ள மக்களிடம் பகிர்ந்து கொண்டார் மோசே.

தன் மாமன் ஆலோசனை கூறியபோது, மோசே எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரையும் கர்த்தரின் ஆலோசனைப்படி நடத்தும் தனக்கு, மாமனின் ஆலோசனை எதற்கு என்று அவர் நினைக்கவில்லை. ‘தான் எடுக்கும் முடிவே சரியானது’ என்று தன்னை குறித்து உயர்வாகவோ, ‘தனக்கு ஆலோசனை செய்யும் அளவுக்கு மாமனுக்கு தகுதியில்லை’ என மாமனைத் தரக் குறைவாக நினைக்கவோ அல்லது ‘சிறிது நாட்கள் இந்த முறையில் நான் நியாயம் தீர்க்கட்டும். அது ஒத்துவரவில்லையென்றால், பின்னர் உங்கள் அறிவுரைப்படி செய்கிறேன்’ என்றோ மோசே கூறவில்லை. மாறாக தன் மாமன் தன்னை விட்டு போகுமுன் அவர் சொன்னபடி அவர் செய்தார். அதனால் உண்டான பயனையும் அடைந்தார். அவருடைய தாழ்மையும் கீழ்ப்படிதலும் அவருக்கு பாரத்தை குறிக்க உதவியது.

நம் வாழ்விலும் தேவனுக்கு கீழ்ப்படியும் மூப்பர்கள் அறிவுரை கூறும்போது, உதாசீனப்படுத்தாது, ஜெபித்து தாழ்மையுடன் அறிவுரையை ஏற்றுக்கொள்வது நமக்கு பயனளிக்கும்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### லேமுவேலின் தாய் [நீதி. 31]

ராஜாவாகிய தன் மகனுக்கு அறிவுரைக் கூறிய தாய். நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் தாய் தன் மகனாகிய லேமுவேலுக்கு போதித்ததைப் பார்க்கிறோம். அவள் தேவனுக்கு முன்பாக பொருத்தனை செய்து இந்த மகனைப் பெற்றாள்(நீதி.31:2).

**லேமுவேலின் தாயின் போதனைகள்:**

**1. ஸ்திரீகளுக்கு உன் பெலனைக் கொடாதே**

குணசாலியான ஒரு ஸ்திரீயை தன் வாழ்வில் கண்டுபிடிக்க அவள் தன் மகனை உற்சாகப்படுத்துகிறாள். தன் கணவனோடும், பிள்ளைகளோடும், எல்லா மக்களோடும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என விளக்குகிறாள். எப்பேர்பட்ட ராஜாவாக இருந்தாலும் தன் பெலனைக் காத்துக்கொள்ள வேண்டும். இதை புரிந்து கொள்ளாவிட்டால், ஸ்திரீகள் பெலனைக் கொண்டு போய்விடுவார்கள் என எச்சரிக்கிறாள்.

**2. திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்கு தகுதியல்ல**

மதுபானம் தகுதியல்ல, குடித்து, மதி மயங்கி சிறுமைபட்டவர்களின் நியாயத்தை புரட்டக்கூடாது என்பதற்காக கூறுகிறாள். அது மாத்திரமல்ல. மதுபானம் பண்ணினால் நியாயப் பிரமாணத்தை மறந்து விடுவார்கள். எனவே தான் எச்சரிக்கிறாள்.

**3. ராஜாங்கத்தின் முறை**

நம்மெல்லாருக்கும் லேமுவேலின் தாய் ஒரு சவால். ஆட்சி செய்யும்போது நாட்டு மக்கள் போற்றும்படி வாழ அறிவுறுத்துகிறாள்.

- ஊமையனுக்காகவும், திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்திற்காகவும் வாயை திறக்க வேண்டும்.
- நீதியாய் நியாயம் தீர்க்க வேண்டும்.
- சிறுமையும், எளிமையுமானவனுக்கு நியாயஞ் செய்ய வேண்டும்.

நல்ல குடிமகனை உருவாக்குவது ஒரு தாயின் கடமை. நல்ல மகன், நல்ல ஒரு கணவனாக, தலைவனாக உருவாக முடியும்.

லேமுவேலின் தாய் அவனுக்குக் கூறிய அறிவுரைகளை கவனித்துக் கேட்டதால், இவன் ஒரு கீழ்ப்படிதலுள்ள மகனாக இருந்திருப்பான் என புரிகிறது.


நாமும் கூட நம் பிள்ளைகளுக்கு நல்ல அறிவரையை கூறுவோம். நமது பொறுப்புகளை நிறைவேற்ற கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக!

**ஷர்மிளா ராஜேஷ்**

# CHILDREN'S CORNER

Dear Children,


The theme this October is "**THE WISDOM OF THE ELDERLY**".




The oldest book in the Bible says, "With the ancient is wisdom; and in length of days understanding" (Job 12:12).

The Divine design was that, with age, people would have more and more understanding of the Lord, and thus more and more able to pass on to the generation following them.

## IN OUR FAMILY



Remember that the first commandment with a promise was to honor your father and mother (Exodus 20:12; Ephesians 6:2).

In an age where the elderly are often abused and, at best ignored, it is important that those who know God obey this principle.

## IN THE CHURCH FAMILY



God's way is that the older men teach the younger men and the older women teach the younger women (Titus 2).

We are to treat older men and women in the church body as we would treat our own father and mother (1 Timothy 5:1-2).

Remember that they were patient with us! Be patient with them. Their pace may have slowed but their insight is vital as we move forward.

**Listen To The Old Man Who Has Walked With God! He Has Something To Say!!**
**Listen To The Old Woman Who Has been Faithful ! She Has a Truth To Share !!**

## MAJOR BIBLE EVENT # 9

## CROSS: THE SAVIOR WHO SUFFERED

After Jesus' triumphal entry into Jerusalem, Jesus had a Passover meal with his disciples.

After sharing the meal together, Jesus went with his disciples to the garden of Gethsemane. Shortly after Jesus prayed for God's will to be done, Jesus was led away, mocked, beaten and crucified.

Even though Jesus died on the cross without doing anything to deserve it, the amazing thing is that he rose again three days later!



**WHY IS JESUS' DEATH AND RESURRECTION SO IMPORTANT:** Jesus took the punishment that we deserve for our sins by dying on the cross, and because he was resurrected, he has the authority over our sins and the ability to save us from the penalty for sin!

He paid the price so that we can live with God for eternity, in heaven!

## CHILDREN IN THE BIBLE # 9 – THE BOY TIMOTHY

From infancy and throughout his life, Timothy studied the Scriptures and learned about God.




The second book of Timothy says in 3:15 - "You have known the Holy Scriptures since you were a child. The Scriptures are able to make you wise. And that wisdom leads to salvation through faith in Christ Jesus."

His father was an unbelieving Greek, but his mother and grandmother were followers of Jesus and taught young Timothy well.


As a young man, Timothy joined the Apostle Paul on missionary journeys and continued serving God in many ways over his lifetime. He was like a son to Paul and one of his most trusted co-workers.

**Daily Application** – Timothy's life is a wonderful example of a child who learned from God's Word and grew up to be strong and faithful. We also can begin to learn about God from an early age. Our parents and grandparents are our role models.

# SAYING IT WITH PICTURES...




If any of you lacks wisdom, he should ask God, who gives generously to all without finding fault, and it will be given to him.
– James 1:5 NIV





Happy is the man that findeth wisdom, and the man that getteth understanding. For the merchandise of it is better than the merchandise of silver, and the gain thereof than fine gold.
— Proverbs 3:13–14 KJV


# TINY TOTS SECTION

## COMPLETE AND COLOR IN...




## SPENDING TIME WITH GRANDPARENTS CAN TEACH US A LOT!!




## CHILDREN TOO CAN ASK GOD AND RECEIVE!!

**THE APOSTLE PAUL TELLS TIMOTHY THAT THE SCRIPTURES HE LEARNT FROM HIS MOTHER AND GRANDMOTHER WILL MAKE HIM WISE.**




**THE ELDERS IN OUR FAMILY HELP US GROW IN OUR KNOWLEDGE OF JESUS.**

**SPOT 7 DIFFERENCES IN THE PICTURE BELOW**



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – THE WISDOM OF THE ELDERLY

1. What does Proverbs 16:31 say about the gray hair of the elderly?

| | | | |
|---|---|---|---|
| a. | It is a sign of weakness. | b. | It is a crown of glory. |
| c. | It should be dyed. | d. | It represents sadness. |

2. In which book of the Bible are we advised to listen to the advice of the aged?

| | | | |
|---|---|---|---|
| a. | Esther | b. | Job |
| c. | Psalms | d. | Proverbs |

3. According to Leviticus 19:32, how should we treat the elderly?

| | | | |
|---|---|---|---|
| a. | Ignore them. | b. | Honor them. |
| c. | Compete with them. | d. | Limit their roles. |

4. Which of the following characters is known for his wisdom?

| | | | |
|---|---|---|---|
| a. | Abraham | b. | Moses |
| c. | Job | d. | Solomon |

5. What is the advice given to the young regarding the elderly in the Bible?

| | | | |
|---|---|---|---|
| a. | To challenge them. | b. | To seek their counsel. |
| c. | Compete with them. | d. | To surpass them. |

6. According to Job 12:12, what is said about wisdom in relation to the aged?

| | | | |
|---|---|---|---|
| a. | Wisdom is found only in youth. | b. | Wisdom is with the aged. |
| c. | Wisdom is irrelevant. | d. | Wisdom is gained with wealth. |

7. In Titus 2:2-3, what role are older men and women encouraged to take?

| | | | |
|---|---|---|---|
| a. | To retire from teaching. | b. | To lead only in the church. |
| c. | To mentor the younger generation. | d. | To focus on personal gain. |

8. What does Psalm 92:14 say about the elderly?

| | | | |
|---|---|---|---|
| a. | They are past their prime. | b. | They have lost their purpose. |
| c. | They should not be active. | d. | They still bear fruit in old age. |

9. In Proverbs 4:7, what is described as the principal thing to acquire?

| | | | |
|---|---|---|---|
| a. | Wealth | b. | Fame |
| c. | Wisdom | d. | Power |

10. What is the message in Proverbs 1:7 regarding the fear of the Lord?

| | | | |
|---|---|---|---|
| a. | Beginning of wisdom. | b. | Leads to success. |
| c. | Is only for the Elderly. | d. | Is unnecessary. |


11. In James 3:17, what characteristics are associated with wisdom from above?

| | | | |
|---|---|---|---|
| a. | Bitter envy and selfish ambition. | b. | Disregard for others. |
| c. | Wealth and power. | d. | Pure, peace-loving, considerate. |

12. In 2 Timothy 1:5, who has genuine faith passed down from the elderly?

a. Timothy. b. His grandmother. c. His mother. d. His Father.

NAME: ______________________________



# Book of Proverbs

The Book of Proverbs is a collection of wise sayings and teachings that reflect King Solomon's wisdom, along with contributions from other wise individuals. It is written in poetic form and covers a wide range of topics, including wisdom, ethics, morality, family, work, relationships, and many aspects of daily life.

Find the key point in each proverb of King Solomon. Do you live by each proverb?

**Proverbs 1:7** - The fear of the Lord is the beginning of knowledge, But fools despise wisdom and instruction.

**Proverbs 11:3** - The integrity of the upright will guide them, But the perversity of the unfaithful will destroy them.

**Proverbs 16:18** - Pride goes before destruction, And a haughty spirit before a fall.

**Proverbs 12:15** - The way of a fool is right in his own eyes, But he who heeds counsel is wise.

**Proverbs 15: 1** - A soft answer turns away wrath, But a harsh word stirs up anger.

**Proverbs 15: 16** - Better is a little with the fear of the Lord, Than great treasure with trouble.

**Proverbs 19:11** - The discretion of a man makes him slow to anger, And his glory is to overlook a transgression.

**Proverbs 17:17** - A friend loves at all times, And a brother is born for adversity.

SOLOMON (BIBLE) WORKSHEETS

KIDSKONNECT.COM

## FOOD FOR THOUGHT...



Was King Solomon Wise or Foolish at the end of his life? ______________. Why do you think that happened?


Perhaps because he forgot the final wise instructions given by his Father David when he was young (1 kings 2:3)

______________________________________________________________


______________________________________________________________


______________________________________________________________

## GOD TELLS US TO SEARCH FOR WISDOM AND UNDERSTANDING (PROVERBS 2:3–6). THE BEST PLACE TO LOOK IS IN THE BIBLE!




## HOW WELL DO YOU KNOW YOUR BIBLE?




______________________________ ______________________________

# THE WISE OLD MAN, THE YOUNG BOY, AND THE LITTLE SPARROW



There was once a wise old man who lived near a small village. He was said to be never wrong, and people would visit him from all over the land to receive his wisdom.

One day, a young boy decided to trick him into being wrong.



The boy caught a small bird in a bush and cupping it carefully in his hands, so it was hidden, brought it to the wise old man.

He first asked the wise old man, "What have I got in my hands?" The wise old man looked carefully at the boy's hands, noted the feathers peeking out, and said, "Why, a bird of course."




The boy had already thought about his next question. He then asked, "Is it alive or dead?"

If the old man said alive, the boy planned to crush the bird between his hands, and if the old man said dead, he would let it go free.


The old man paused and rubbed his beard, appearing to think carefully about his response. Then he pulled two chairs and beckoned the boy to sit.


And taking a seat himself, the man looked the boy directly in the eye and said, "whether that bird is alive, or dead lies in your power.

**Application**: This story is an example of the wisdom of the elderly. It tells a story, while teaching us the power of choice, the need to take responsibility and the consequences of our actions.



## PAUL'S LETTER TO TIMOTHY. SPOT 10 DIFFERENCES





## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of October is: ________________________________ ______________________________________________.
2. Why is Jesus' Death and Resurrection so important?
   ______________________________________________________________________
   ______________________________________________________________________
3. What can we learn from the example of Timothy?
   ______________________________________________________________________
   ______________________________________________________________________
   ______________________________________________________________________
4. James 1:5 says - _______________________________________________________
   ______________________________________________________________________
   ______________________________________________________________________

Children, God has given us wise elders - parents, grandparents, and teachers. Let us ask God for the power of Holy spirit to enable us to walk wisely.

God bless,
Mrs. Briliya Jeyaseelan.

# Answers to September Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – LIBERATED LIFE

1. b. 30
2. b. Changing water into wine
3. b. 99
4. a. One
5. c. The good Samaritan.
6. d. Jerusalem
7. a. He was robbed and beaten.
8. d. A Priest
9. a. A Levite
10. b. The Samaritan
11. b. An inn
12. b. The Samaritan

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

3. The theme for the month of September is: **CHRISTIAN RESPONSE TO POVERTY.**

4. What can you do for the Poor?
   - **PRAY FOR THE POOR**
   - **GIVE TO THE POOR**
   - **ADVOCATE FOR THE POOR**
   - **EDUCATE THE POOR**

5. Throughout his ministry, Jesus lived out the purposes that God had given to him, which included **PROCLAIMING THE GOOD NEWS TO THE POOR, PROVIDING LIBERTY TO THE CAPTIVES, FEEDING THE HUNGRY AND HEALING THE SICK.**

6. Which Parable of Jesus teaches about helping others? **THE GOOD SAMARITAN PARABLE**

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

1. பத்து அதிபதிகளைப் பார்க்கிலும் எது அதிக பெலவானாக்கும்?
2. பத்து பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தது யார்?
3. பத்து மூடுதிரைகளால் எதை உண்டு பண்ண வேண்டும்?
4. பத்து தரம் நிந்திக்கப்பட்டது யார்?
5. பத்து ஒட்டகங்களை தன்னுடனே கொண்டு போனது யார்?
6. பத்து குடம் பிடிக்கிற கலத்துக்குச் சரியானது எது?
7. பத்து வருஷம் மட்டும் யாருடைய நாட்களில் தேசம் அமரிக்கையாயிருந்தது?
8. பத்து பேரும் கேட்டு யார் மேல் எரிச்சலானார்கள்?
9. பத்து நாளைக்கு ஒரு தரம் எது செலவழிந்தது?
10. பத்து வாலிபரை அழைத்து கர்மேலுக்குப் போகச் சொன்னது யார்?
11. பத்து பேர் அல்லவா, யார்?
12. பத்து கற்பனைகளாகிய உடன்படிக்கையை எத்தனை கற்பலகைகளில் எழுதினார்?
13. பத்து நாள் சோதிக்கப்பட்டவர்கள் யார்?
14. பத்து சேவகர் சூழ்ந்து யாரை அடித்துக் கொன்று போட்டார்கள்?
15. பத்து வருஷம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தது யார்?

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், **25-ம் தேதிக்குள்** எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.*

# செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | யூதா, சிமியோன் | யோசுவா 21:10-16 |
| 2 | பத்மராகம், புஷ்பராகம், வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும். | எசே. 28:13 |
| 3 | ஆவியின் கனி | கலா.5: 22, 23 |
| 4 | சங்கீதம் – 8, 20, 28, 47, 52, 98, 99, 113, 122 | |
| 5 | பென்யமீனரில் அபியேசர் என்னும் ஆனதோத்தான் | 1நாளா. 27:12 |
| 6 | ஜெபவேளை | அப்.3:1 |
| 7 | 1. ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்ட நிகழ்ச்சி<br>2. கொர்நேலியு தரிசனம் கண்ட நிகழ்ச்சி | மத்தேயு 27:46,50<br>அப். 10:3 |
| 8 | கீதெயோனின் குமாரனாகிய அபீதான் என்னும் பென்யமீன் புத்திரரின் பிரபு | எண். 7:60 |
| 9 | கிஸ்லே | சகரியா 7:1 |
| 10 | குளிர்காலத்துக்குத் தங்கும் வீட்டில் | எரே. 36:22 |
| 11 | யூதா பென்யமீன் கோத்திரத்தார் எல்லாரும் மூன்று நாளைக்குள்ளே எருசலேமிலே கூடினார்கள் | எஸ்றா 10:9 |
| 12 | ஏலாவின் குமாரனாகிய ஓசெயா | 2 ராஜா. 17:1 |
| 13 | பழைய பலனை | லேவி.25:22 |
| 14 | சமாரியா | 2 ராஜா. 17:6 |
| 15 | கொர்நேலியு | அப். 10:3 |

## செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mr.Emmanuel
4. Mrs. Esther Pauline Rani
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Grace shekar
8. Mrs.Helen Sharmila Ray
9. Mrs.Jebaseeli Asir
10. Mrs. Jenila Gannraj.L
11. Mrs.Jasmine Sobha
12. Mr. Jeba Jino
13. Mrs.Kishi MaherMrs.Manuel Sarah
14. Mrs.Nandhini Rajkumar
15. Mrs .Priya Ranjith Kumar
16. Mr. Prawin Durai Sam
17. Mrs.Praveena Arun
18. Mr.Salin Robert
19. Mrs.Sheeba Merlin
20. Mrs.Sheeba Herlin
21. Mrs. Subija Jino
22. Mrs . Sharmila Rajesh
23. Mrs.Subi Kishore
24. Mr.Selva Shaji

## Children who answered September – 2024 Quiz

1. Aaran
2. Aadhav Steve Matthew
3. Adelyn Victoria Jeyaseelan
4. Camryn Robert.S
5. Clement Dave
6. Danion Lemuel
7. Daniel Vanya (RUWAIS)
8. Evelyn Gracia
9. Evelyn Loria V
10. Galvin Robert.S
11. Gabrilyn Hannah
12. Giana Elin
13. Hadriel Adventier
14. Jevlyn Ana
15. Jerilyn Pushpam Nelson
16. Johan Sam Manuel
17. Joha Anit Manuel
18. Jeya Jehosheba Maher
19. Jeya Joshua Maher
20. Jen Scudd
21. Jim Scott
22. Johanan Paul Jino
23. Joanna Paul Jino
24. Jaylan paul Jino
25. Joshuva koshy
26. Jaslin shanna
27. Jebasheba .M
28. Janey Titus
29. Joel Abrakam
30. Jarick Aaron
31. KEV SHANNEN.P.S
32. Liana Erin
33. Leona Juliet
34. Rivqah Deby Rajkumar
35. Steffi Priscilla .R
36. Starlyne Noble
37. Sam Jesvin Vincent
38. Yedidiah Arun (Ruwais)
39. Yovaan jairus (Ruwais)



## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்

***இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி***

***14-06-1912 – 20-01-1997***

### வளர்ந்து பெருகிய VBS

மதுரையில் ஆரம்பிக்கப்பட்ட VBS-ஐக் கண்ட மாவட்டங்களும் அத்தியட்சாதீனங்களும் அழைப்பு விடுவிக்கவே திருச்சி, தஞ்சாவூர், சேலம் என SIBI மாணவர், நண்பர் கொண்ட பங்காரபெட் VBS தன் சிறகை விரித்தது. SIBI-ல் பயில வந்த அண்டை மாநில மாணவர்கள் VBS-ஐ தங்கள் மாநில பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்த ஆவலாய் இருந்ததால் திருமதி. ஹேமில்டன் அம்மையார் கேரளா, ஆந்திரா மாநிலங்களுக்குச் சென்று இயக்குநர் பயிற்சியை செவ்வனே நடத்தினார். இந்தக் காலக் கட்டத்தில் திரு. J.D. அருள்மணி, திரு. தியோடர் வில்லியம்ஸ் போன்றோர் SIBI-ல் மாணவராக இணைந்தனர். பாரத ரீதியில பரவ ஆரம்பித்த இந்த VBS அடிப்படையிலான மாணவருக்கான பாடத்திட்டங்களைத் திரு. தியோடர் வில்லியம்ஸ், செல்வி எஸ்தர் ஃபாக்னரோடு இணைந்து எழுதினார். இந்தப் பாடத் திட்டங்களுக்கு இணையாக வேறு ஒன்றும் காணவில்லை. வேத நுணுக்கங்களிலும், வரைபடக் கற்பனையிலும் திறமை நிறைந்த திரு. J.D. அருள்மணியும், ஓவியரான திரு. நவநீதரும் இணைந்து VBS-ன் கருத்து, கருத்திற்கேற்ற வேதாகமக் கதைகள், உலகளவிலான ஊழியர் வரலாறு மற்றும் மண்ணின் மாந்தரான சில மிஷனரிகளின் வரலாற்றையும் தொகுத்து ஏற்ற படங்களை அச்சடித்து VBS பாடத் திட்டத்தில் சேர்த்தனர்.

VBS அறிமுகமான மாவட்டங்கள், மாநிலங்களில் அது ஒரு பண்டிகை போல அனுசரிக்கப் பட்டது. வாலிபர் VBS நாட்களை விரும்பும் ஊழியநேரமாக எண்ணினர். பெற்றோர் VBS-ஐ தங்கள் பிள்ளைகளுக்கான அதிமுக்கிய விடுமுறை வகுப்புகளாக, பயிற்சியாக மதித்தனர். எனவே விடுமுறைக்கான வழிப்

பயணங்களும், ஏன், திருமணங்களும் கூட VBS நாட்களை அனுசரித்தே நிச்சயிக்கப்பட்டன. அந்த ஆரம்பக் கட்ட VBS-ன் சீனியர் பிரிவில் பங்கேற்ற திரு. S.T. நோவா, திரு. மாணிக்கவாசகம், திரு. சத்தியசிங், திரு. வாஷிங்டன் ஸ்வாமிதாஸ், திரு. தேவதாஸ், திரு. ஜெயவீரன் ஆகியோர் பிந்தைய நாட்களில் தேவனுடைய கிருபையால் ஊழியத்தில் பெரும் பொறுப்பு வகிக்கும் தேவ ஊழியராகவும், தேவ ஊழியம் செய்யும் பெருந்தலைவர்களாகவும் மலர்ந்தனர். இவ்விதம் வளர்ந்த இந்திய ஊழியத்தின் ஆசிரியர்களாக திரு வி. சத்யா, திரு. ஞானராஜா, டாக்டர் புஷ்பராஜ், திரு. எமில் ஜெபசிங், திரு. விக்டர் ஜாஷ்வா, திரு. நவநீதர், திரு. ஆல்பிரட் என பட்டியலிடமுடியாத அநேகர் தங்களை இணைத்துக் கொண்டனர்.

### VBS-ன் பின் தொடர் ஊழியம்

VBS ஊழியங்களில் பங்கெடுத்த ஆசிரியர்களுக்கும், சீனியர் மாணவர்களுக்கும் பொதுவாக ஜுன் மாதத்தில் தொடர் ஊழியம் நடைபெற்றது. சகோதரர் தியோடர் வில்லிம்ஸின் வேத ஆராய்ச்சி வகுப்புகள், சகோதரர் பி.சாமுவேலின் செய்திகள் மற்றும் ஊழிய வரலாறு அறிமுக நேரங்கள் சகிதமாக இந்த பின்தொடர் ஊழியம் உற்சாகமனதாக நடைபெற்றது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும், குழுக்களாகவும் புதுப்புது சாட்சியின் அனுபவங்கள் கிடைத்தன. இளைஞர் கிறிஸ்துவுக்குள்ளாக திடப்படுத்தப்பட்டனர். இப்பட்டிப்பட்ட VBS பின் தொடர் கூட்டமாக கன்னியாகுமரியில் கூடிய கூட்டம் சூரிய உதயமுதல் மதியம் 2-மணி வரை ஜெபக் கூட்டமாக மட்டும் நீடித்ததாம். சுவிசேஷகர் பில்லி கிரகாமின் இந்திய விஜயம் அநேகரைக் கிறிஸ்துவுக்குள்ளாக ஊக்குவித்தது. VBS மூலமாக வேதத்தின் வெளிச்சத்தில் நடைபயில பழகிய இளைஞர் வாஞ்சையோடும் வீரியத்தோடும் சத்தியத்தில் ஓங்கி வளருவதோடு, அதை சுவிசேஷமாக அறியாதோருக்கு அறிவிக்க வேண்டுமென்ற உந்துதலையும் அசட்டை செய்யவில்லை. VBS-ன் பின் தொடர் ஐக்கியங்கள் மூலமாக உருவானதே நண்பர்கள் ஜெபக்குழு (Friends Prayer Band). ஏற்ற காலத்தில் இந்த ஐக்கியம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (Friends Missionary Prayer Band) என்ற பதிவு செய்யப்பட்ட இயக்கமாக வளர ஆரம்பித்தது. EFI - இவாஞ்சலிக்கல் ஃபெல்லோஷிப் ஆஃப் இந்தியா என்ற இயக்கத்தின் மிகச்சிறு மூலதனத்துடன் சகோதரர் தியோடர் வில்லியம்ஸ் தலைமையில் இந்திய இவாஞ்சலிக்கல் மிஷன் – IEM நிறுவப்பட்டது. ஆரம்பகால VBS ஊழியங்களில் இணைந்த பலர் கிறிஸ்தவ இயக்கங்களின் நிறுவனர்கள் மற்றும் இயக்குநர்களாயினர்.

### குஜராத் VBS ஆரம்பம்

பெரேயாவை மையமாகக் கொண்டு தமிழகத்தில் இயங்கிய VBS 1989-ம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் தனது கிளையை நிறுவியது. சகோதரி திலகா திரவியம் அதற்கு இயக்குநராகத் தன்னை அர்ப்பணிக்கவே 1989 ஜுலை 13-ம் நாள் சூரத் மாவட்டதிலுள்ள வியாராவை மையமாகக் கொண்டு இந்த VBS செயல்படத் துவங்கியது.. சகோதரி திலகாவுடன் குமாரி வால்டா, குமாரி ஷரிவா இருவரும் இணைந்தனர்.

- **தொடரும்**

## பாடல் பிறந்த கதை



### கர்த்தா நீர் வசிக்கும் [பாமாலை 221]
### (*We love the place O God* )

1. கர்த்தா, நீர் வசிக்கும்
ஸ்தலத்தை நேசிப்போம்;
பாரின்பம் யாவிலும்
உம் வீட்டை வாஞ்சிப்போம்.
2. உம் ஜெப வீட்டினில்
அடியார் கூட, நீர்
பிரசன்னமாகியே
உம் மந்தை வாழ்த்துவீர்.

***'கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், உமது மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன்' சங் 26 : 8***

இஸ்ரவேல் புத்திரர் வாக்குப் பண்ணப்பட்ட கானான் நாட்டில் குடியேறிய பின்பு, எருசலேம் நகரம் அவர்களது தெய்வ வழிபாட்டுக்கு மையமான இடமாக விளங்கியது. தாவீதரசன் காலத்தில் தேவாலயம் கட்டப்படாவிடினும்,ஆசரிப்புக் கூடாரமே தேவாலயமாகக் கருதப்பட்டது. ஆண்டு தோறும் இஸ்ரவேலர் பஸ்கா முதலிய முக்கியமான பண்டிகைகளுக்குஎருசலேம் செல்லுவது வழக்கமாயிருந்தது. மேலே காட்டிய வசனத்தைத் தாவீதரசன் எழுதும்போது, கடவுளின் உறைவிடமாகக் கருதப்பட்ட எருசலேமின்பேரிலும், அதிலிருந்த ஆசரிப்புக் கூடாரத்தின் பேரிலும், தமக்கும் தம் ஜனத்தாருக்கும் இருந்த வாஞ்சையைக் குறிப்பிடுகிறார். கிறிஸ்தவர்களாகிய நாமும், ஓய்வு நாட்களிலும், மற்றும் நாட்களிலும் ஆலயத்துக்குச் செல்லுகிறோம். நாமும் நமது ஆலயங்களை நேசிக்கிறோம். ஆனால் நாம் எவ்வித வாஞ்சையுடன் ஆலயத்துக்குச் செல்லுகிறோம்? சிந்தித்துப் பார்ப்போமாக.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஆங்கிலக் கப்பற்படையைச் சேர்ந்த வில்லியம் புல்லக் (William Bullock) என்பவர், ஒரு நில அளவைக் குழுவுடன் (Survey Party) கனடா நாட்டுக்கருகிலுள்ள நியூஃபவுண்ட்லாண்ட் (Newfoundland) என்னும் தீவுக்கு அனுப்பப்பட்டார். இக்குழு அத்தீவின் கடற்கரையை அளந்து கணிக்க வேண்டியிருந்தது. அத்தீவில் குடியிருந்த மக்களின் ஆத்தும நிலையைக் கண்டு,

பக்தியுள்ள கிறிஸ்தவரான புல்லக் மிகவும் மனவேதனை அடைந்தார். கடவுள் வழிபாட்டுக்கு ஏதுவான எவ்வித வசதியும் அவ்விடத்தில் இல்லாதிருந்து. தெய்வாராதனைக்கேற்ற ஆலயங்களோ, வேத போதனைக்கேற்ற ஏற்பாடுகளோ சற்றேனும் அங்கில்லை. இதைக் கண்டு அவர் கப்பற்படையில் தமது உத்தியோகத்தை வேலையொழிப்புச் செய்து, இங்கிலாந்துக்குத் திரும்பினார். அங்கு திருமறைப் பயிற்சியடைந்து, குருப்பட்டமும் பெற்று, எஸ்.பி.ஜி. சங்கத்தாரின் ஆதரவில் திரும்பவும் நியூஃபவுண்ட்லாண்ட் தீவுக்கு மிஷனரியாக வ்ந்தார். அங்கு இரவுபகலாக உழைத்து, அநேகரை ஆண்டவரண்டை திருப்பினார். மேலும், கடவுள் வழிபாட்டுக்காக அங்கு ஆலயங்கள் கட்டத் தீர்மானித்து, திரித்துவக்குடா (*Trinity Bay*) என்னுமிடத்தில் தமது முதல் ஆலயத்தைக் கட்டி முடித்தார். இவ்வாலயத்தின் மங்கலப்படைப்பு ஆராதனையில் பாடுவதற்காக, **‘கர்த்தா, நீர் வசிக்கும் ஸ்தலத்தை நேசிப்போம்’** என்னும் பாடலை அவரே எழுதினார். மிகவும் எளிமையான சூழ்நிலையில் எழுதப்பட்ட இப்பாடலானது கிறிஸ்தவ உலகமெங்கும் ஒரு சிறந்த பாடலாகக் கருதப்பட்டு ஆலய மங்கலைப்படைப்பு விழாக்களிலும், மற்றும் ஆலய ஆண்டு விழாக்களிலும் தவறாமல் பாடப்படுகிறது.

அநேக ஆண்டுகளுக்குப்பின், வில்லியம் புல்லக் போதகர் நோவா ஸ்கோஷியாவிலுள்ள (Nova Scotia) ஹாலிபாக்ஸ் (Halifax) நகரின் பிரதமகுருவாகத் திருப்பணியாற்றும்போது, இப்பாடலுக்கு, மேலும் இரண்டு கவிகள் எழுதினார். இவை நமது பாட்டுப் புத்தகங்களில் சேர்க்கப்படவில்லை. அவற்றில் ஒன்று கர்த்தா, உம் வசனத்தையும், இரக்கத்தையும் பிரஸ்தாபப்படுத்தும் பக்தர்களை நேசிக்க்கிறோம்’ என்னும் பொருள் கொண்டது. ‘Hymns Ancient and Modern’ என்னும் ஆங்கிலப் பாட்டுப் புத்தகத்தைப் புதுப்பிக்கும் குழுவிலுள்ள ஸர் ஹென்றி பேக்கர், இக்கவியைச் சேர்க்க விரும்பாமல், நமது பாடலிலுள்ள ஐந்தாவது கவியாகிய, ‘மெய் ஜீவனுள்ளதாம் உம் வார்த்தை நேசிப்போம்’ என்னும் கவியைத் தாமே எழுதிச் சேர்த்துக்கொண்டார்.

அக்டோபர் மாத தலைப்பு

**பெண் குழந்தைகள்**

***Female Children***

## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – அக்டோபர் 2024


| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 4 | வெள்ளி | 6.30 pm – 7.30 pm | Junior Church |
| | | 8.00 pm – 11.00 pm | **Church Day & Choir Day** – தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 6 | ஞாயிறு | 11.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் – *Cocoa Lounge, ADCP Tower, 17th Floor, Electra* |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - *Cocoa Lounge, ADCP Tower, 17th Floor, Electra* |
| 8 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 11 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 13 | ஞாயிறு | 5.30 pm – 6.30pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 15 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 18 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 20 | ஞாயிறு | 6.30 pm – 7.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 22 | செவ்வாய் | 7.00 pm – 8.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 25 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 29 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 31 | வியாழன் | 11.45 pm – 12.00 am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# BIBLE READING FOR CHILDREN – OCTOBER 2024



| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.10.24 | II Corinthians | 11 : 6 - 12 |
| 2.10.24 | II Corinthians | 11 : 13 - 18 |
| 3.10.24 | II Corinthians | 11 : 19 - 25 |
| 4.10.24 | II Corinthians | 11 : 26 - 33 |
| 5.10.24 | II Corinthians | 12 : 1 - 5 |
| 6.10.24 | II Corinthians | 12 : 6 - 10 |
| 7.10.24 | II Corinthians | 12 : 11 - 15 |
| 8.10.24 | II Corinthians | 12 : 16 - 21 |
| 9.10.24 | II Corinthians | 13 : 1 - 5 |
| 10.10.24 | II Corinthians | 13 : 6 - 9 |
| 11.10.24 | II Corinthians | 13 : 10 - 14 |
| 12.10.24 | Galatians | 1 : 1 - 5 |
| 13.10.24 | Galatians | 1 : 6 - 10 |
| 14.10.24 | Galatians | 6 : 11 - 16 |
| 15.10.24 | Galatians | 6 : 17 - 24 |
| 16.10.24 | Galatians | 2 : 1 - 5 |
| 17.10.24 | Galatians | 2 : 6 - 10 |
| 18.10.24 | Galatians | 2 : 11 - 15 |
| 19.10.24 | Galatians | 2 : 16 -21 |
| 20.10.24 | Galatians | 3 : 1 - 5 |
| 21.10.24 | Galatians | 3 : 6 - 11 |
| 22.10.24 | Galatians | 3 : 12 - 16 |
| 23.10.24 | Galatians | 3 : 17 - 22 |
| 24.10.24 | Galatians | 3 : 23- 29 |
| 25.10.24 | Galatians | 4 : 1 - 5 |
| 26.10.24 | Galatians | 4 : 6 - 10 |
| 27.10.24 | Galatians | 4 : 11 - 15 |
| 28.10.24 | Galatians | 4 : 16 - 20 |
| 29.10.24 | Galatians | 4 : 21 - 25 |
| 30.10.24 | Galatians | 4: 26 - 31 |
| 31.10.24 | Galatians | 11 : 1 - 5 |

# தினசரி வேத வாசிப்பு பகுதிகள் – அக்டோபர் 2024




| தேதி | நாள் | காலை | | மாலை | |
|---|---|---|---|---|---|
| 1 | செவ்வாய் | 1 நாளாகமம் | 3 : 1 - 24 | லூக்கா | 6 : 1 - 16 |
| 2 | புதன் | 1 நாளாகமம் | 4 : 1 - 20 | லூக்கா | 6 : 17 - 31 |
| 3 | வியாழன் | 1 நாளாகமம் | 4 : 21 - 43 | லூக்கா | 6 : 32 - 47 |
| 4 | வெள்ளி | 1 நாளாகமம் | 5 : 1 - 12 | லூக்கா | 7 : 1 - 16 |
| 5 | சனி | 1 நாளாகமம் | 5 : 13 - 26 | லூக்கா | 7 : 17 - 35 |
| 6 | ஞாயிறு | 1 நாளாகமம் | 6 : 16 - 32 | லூக்கா | 7 : 36 - 50 |
| 7 | திங்கள் | 1 நாளாகமம் | 6 : 33 - 55 | லூக்கா | 8 : 1 - 15 |
| 8 | செவ்வாய் | 1 நாளாகமம் | 6 : 1 - 15 | லூக்கா | 8 : 16 - 26 |
| 9 | புதன் | 1 நாளாகமம் | 6 : 56 - 81 | லூக்கா | 8 : 27 - 39 |
| 10 | வியாழன் | 1 நாளாகமம் | 7 : 1 - 15 | லூக்கா | 8 : 40 - 56 |
| 11 | வெள்ளி | 1 நாளாகமம் | 7 : 1 6 - 30 | லூக்கா | 9 : 1 - 13 |
| 12 | சனி | 1 நாளாகமம் | 7 : 31 - 40 | லூக்கா | 9 : 14 - 27 |
| 13 | ஞாயிறு | 1 நாளாகமம் | 8 : 1 - 40 | லூக்கா | 9 : 28 - 41 |
| 14 | திங்கள் | 1 நாளாகமம் | 9 : 1 - 13 | லூக்கா | 9 : 42 - 62 |
| 15 | செவ்வாய் | 1 நாளாகமம் | 9 : 14 - 30 | லூக்கா | 10 : 1 - 16 |
| 16 | புதன் | 1 நாளாகமம் | 9 : 31 - 44 | லூக்கா | 10 : 17 - 28 |
| 17 | வியாழன் | 1 நாளாகமம் | 10 : 1 - 14 | லூக்கா | 10 : 29 - 44 |
| 18 | வெள்ளி | 1 நாளாகமம் | 11 : 1 - 14 | லூக்கா | 11 : 1 - 15 |
| 19 | சனி | 1 நாளாகமம் | 11 : 15 - 25 | லூக்கா | 11 : 16 - 28 |
| 20 | ஞாயிறு | 1 நாளாகமம் | 11 : 26 - 47 | லூக்கா | 11 : 29 - 44 |
| 21 | திங்கள் | 1 நாளாகமம் | 12 : 1 - 15 | லூக்கா | 11 : 45 - 54 |
| 22 | செவ்வாய் | 1 நாளாகமம் | 12 : 16 - 30 | லூக்கா | 12 : 1 - 15 |
| 23 | புதன் | 1 நாளாகமம் | 12 : 31 - 40 | லூக்கா | 12 : 16 - 32 |
| 24 | வியாழன் | 1 நாளாகமம் | 13 : 1 - 14 | லூக்கா | 12 : 33 - 46 |
| 25 | வெள்ளி | 1 நாளாகமம் | 14 : 1 - 17 | லூக்கா | 12 : 47 - 59 |
| 26 | சனி | 1 நாளாகமம் | 15 : 1 - 13 | லூக்கா | 12 : 1 - 16 |
| 27 | ஞாயிறு | 1 நாளாகமம் | 15 : 14 - 29 | லூக்கா | 13 : 17 - 35 |
| 28 | திங்கள் | 1 நாளாகமம் | 16 : 1 - 14 | லூக்கா | 14 : 1 - 15 |
| 29 | செவ்வாய் | 1 நாளாகமம் | 16 : 15 - 31 | லூக்கா | 14 : 16 - 35 |
| 30 | புதன் | 1 நாளாகமம் | 16 : 32 - 43 | லூக்கா | 15 : 1 - 19 |
| 31 | **வியாழன்** | **1 நாளாகமம்** | 17 : 1 - 14 | **லூக்கா** | 15 : 20 - 32 |

# ஆராதனை பாடல்கள் – அக்டோபர் 2024



| | |
|---|---|
| **04-10-24** | |
| பாமாலை - 15 | அலங்கார வாசலாலே |
| பாமாலை – 221 | கர்த்தா நீர் வசிக்கும் |
| கீர்த்தனை – 237 & 303 | தந்தானைத் துதிப்போமே<br>எந்நாளுமே துதிப்பாய் |
| கீர்த்தனை - 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| **11-10-24** | |
| பாமாலை - 10 | போற்றிடு ஆன்மமே |
| பாமாலை – 83 | நீர் தந்த நன்மை யாவையும் |
| கீர்த்தனை – 70 & 193 | ஆத்துமே என் முழு உள்ளமே<br>எல்லாம் இயேசுவே |
| முடிவு கவிகள் – 4 | தெய்வ ஆசீர்வாத்தோடே |
| **18-10-24** | |
| பாமாலை - 9 | பூலோகத்தாரே யாவரும் |
| பாமாலை - 267 | போற்றும் போற்றும் |
| கீர்த்தனை – 167 & 153 | நம்பிவந்தேன் மேசியா நான்<br>இயேசுவே கிருபாசனபதியே |
| பாமாலை – 36 (1&2) | என்னோடிரும் மா நேச கர்த்தரே |
| **25-10-24** | |
| பாமாலை – 384 | யுத்தம் செய்வோம் வாரும் |
| பாமாலை - 367 | ஆண்டவா பிரசன்னமாகி |
| கீர்த்தனை – 83 & 184 | இயேசுவின் நாமமே திருநாமம்<br>தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ |
| மங்கள கவிகள் – 2 | கர்த்தர் தந்த ஈவுக்காக |

## திருமறை பாட ஒழுங்குகள் – அக்டோபர் 2024

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-10-24 | திருச்சபை நாள் | 1 ராஜா. 8:22-30 | 2 கொரி. 3:9-17 | யோவான் 10:22-30 | - |
| 11-10-24 | முதுமை | 1 நாளா. 28:9-21 | 2 தீமோ. 1:3-11 | லூக்கா 2:25-38 | 122 |
| 18-10-24 | கிறிஸ்தவ பகிர்வு | மல்கியா 3:6-10 | 2 கொரி. 8:1-15 | மத்தேயு 6:1-6 | - |
| 25-10-24 | சீர்த்திருத்தம் | 2 ராஜா. 23:21-25 | அப். 2:42-47 | யோவான் 2:12-22 | 146 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 01-10-24 | சங்கீதம் | 141 | TCA |
| 08-10-24 | சங்கீதம் | 142 | Al Wadha |
| 15-10-24 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 22-10-24 | சங்கீதம் | 143 | Hamdan |
| 29-10-24 | சங்கீதம் | 144 | Muroor |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



# BIRTHDAY - OCTOBER




| Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Leslie Manohar Isaac. W |
| 1 | Mr. | J. Manuel Raj John |
| 2 | Mr. Dr. | Rajakumar Manickam |
| 2 | Mr. | Yesudian Nayagam Eban |
| 2 | Master | Godfrey Y |
| 3 | Ms. | Gabrilyn Hannah |
| 5 | Rev. | Samuel John Dinakaran |
| 5 | Master. | Hansi Jesinth Rajarigam |
| 6 | Mrs. | Sheeba Herlin. S |
| 6 | Mrs. | Melba Mercy Jeen |
| 6 | Mrs. | Victory A |
| 7 | Master. | Camryn Robert |
| 7 | Master | Kavin Immanuel Arun |
| 8 | Mr. | Ranjith Kumar. J |
| 9 | Mr. | Yuvesh Ray |
| 9 | Mr. | Prabhu Selvanayagam |
| 10 | Mrs. | Agila Shalini |
| 11 | Mrs. | Jebaseeli Idah Hannah |
| 11 | Mrs. | Hepsiba Jeni. M |
| 11 | Mrs. | Sujatha Ruban J |
| 13 | Miss | Diyas Dinesh |
| 14 | Mr. | Abishek Samuel |
| 14 | Ms. | Gifty Chris |
| 14 | Mrs. | Esther Pauline Rani |
| 15 | Master. | Kevin Paul Crishanth |

# BIRTHDAY - OCTOBER




| Date | Title | Name |
|---|---|---|
| 16 | Mrs. | Sheneegah Stanly |
| 20 | Master. | Alston Elvin Paul |
| 20 | Mrs. | Patricia Santhi L |
| 20 | Mr. | Sundar Jebakumar T. |
| 21 | Mr. | Benjemen Elengovan |
| 21 | Baby | Berakah Jessy |
| 22 | Master. | Joshua Mahear |
| 22 | Ms. | Niwisha |
| 23 | Mr. | Ramesh Prabahardhas |
| 23 | Master. | Jahziel Brayden |
| 24 | Mr. | Selvin Franklin N |
| 24 | Ms. | Melki |
| 28 | Mrs. | Sara Santhakumari Elengovan |
| 28 | Mrs. | Amija Behin |
| 29 | Mrs. | Deena Gifty Nishanth |
| 29 | Master. | Jen Scudd |
| 29 | Master | Benson Immanuel Raj |
| 29 | Mrs. | Lavina Daniel |
| 30 | Mr. | Fernandez. J |
| 30 | Miss. | Arlin Sheya |
| 31 | Master | Eion Jayden |
| 31 | Mr. | Edwin |

## WEDDING ANNIVERSARY – OCTOBER




| Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mr. & Mrs. | Rajesh T |
| 2 | Mr. & Mrs. | Vivin Alfred |
| 19 | Mr. & Mrs. | Edwin |
| 21 | Mr. & Mrs. | Jose Wesly. J |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Kavin S | 491 |
| 2 | Mr. Behin Jeyakumar A | 492 |
| 3 | Mr. Raja Singh | 493 |

## NEW ARRIVAL



**இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் சங். 127.4a**

| S.No. | Baby Name | Parent's Name |
|---|---|---|
| 1 | Jaylene Darina | Mr. Jaison & Mrs. Desigta |
| 2 | Elaina Bethany | Mr. Ezra Jerold & Mrs. Adela Sarah Victoria |
| 3 | Matthew Raikkonen | Mr. John Praveen Emmanuel & Mrs. Persis Seljah |

# JUNIOR CHURCH RETREAT


























## TEACHERS' DAY SERVICE



# RUWAIS GAYATHI - TAMIL CSI CHURCH - 9TH ANNIVERSARY



## SPORTS TOURNAMENT -2024











உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள். சங்கீதம் 84:4